**DEADLINE EXTENDED**

Until 14th August 2021

காலக்கெடு ஆகஸ்ட் 14 வரை
நீட்டிக்கப்பட்டுள்ளது

# "விஞ்ஞானத்தினூடாக உலகை புரிந்து கொள்தல் – 03"

மனித திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு அமைச்சு மற்றும்

தேசிய அடிப்படைக்கற்கைகளுக்கான கல்வி நிறுவனத்துடன்

இணைந்து நடாத்தும்

அகில இலங்கை பாடசாலை மாணவர்களிற்கிடையேயான விஞ்ஞான எண்ணக்கருக்களை மேம்படுத்துவதற்கான போட்டி

**2021**

போட்டிக்கான குறிக்கோள்கள்

எமது சூழலிற்குப் பின்னிருக்கும் விஞ்ஞானத்தை அறிய ஆவலை தூண்டுவதன் மூலம் விஞ்ஞானத்திலிருக்கும் ஆராய்ச்சி பற்றிய அறிவை மெருகூட்டி பாடசாலைச் சமூகத்திற்கிடையேயான விஞ்ஞான எண்ணக்கருக்களை மேம்படுத்தல்.

A. மாணவர்கள் சுற்றாடலில் தாம் எதிர்கொள்ளும் நிகழ்வுகளிற்குப்பின்னேயுள்ள விஞ்ஞான கொள்கைகளை அடையாளங்காண வேண்டும். நாளொன்றுக்கு ஒன்று என 20 நாட்களிற்கு சூழலிலுள்ள நிகழ்வுகளிற்குப் பின்னேயுள்ள விஞ்ஞானக் கொள்கைகளை கண்டறிய வேண்டும். பின் அந் நிகழ்வுகளிற்குப் பின்னேயான விஞ்ஞானக் கொள்கைகளை 20 நிகழ்வு மற்றும் கொள்கைகளை உள்ளடங்கலான புத்தகமாக எழுதி கீழ்வரும் 6 வயதுப் பிரிவினராக மாணவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பிரிவு | I | தரம் 6 |
| பிரிவு | II | தரம் 7 |
| பிரிவு | III | தரம் 8 |
| பிரிவு | IV | தரம் 9 |
| பிரிவு | V | தரம் 10 |
| பிரிவு | VI | தரம் 11 |

B. கற்கைக்கான வழிகாட்டல்கள்

- இருளிலிருக்குமொருவர் வெளிச்சத்திலிருக்கும் ஒருவரை பார்க்க முடியும். ஆனால் வெளிச்சத்திலிருக்குமொருவரால் இருளான இடத்திலிருக்குமொருவரை பார்க்க முடியாது.
  ஒரு பொருளை பார்ப்பதற்கு, எமது கண் அப்பொருளிலிருந்தான ஒளிக்கதிர்களை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். இருளிலிருக்கும் ஒருவரினது உடலிலிருந்து ஒளிக் கதிர்கள் எமது கண்ணை வந்தடையாது. அதனாலே அவர் எமது கண்களிற்கு புலப்பட மாட்டார். வெளிச்சத்திலிருக்கும் ஒருவரின் உடலிலிருந்து ஒளிக்கதிர்கள் எமது கண்ணை வந்தடையும். ஆகவே அவர் எமக்கு புலப்படுவார்.

- மீன் தொட்டியின் அடியிலிருந்து மேலே வரும் வளிக்குமிழ்கள் படிப்படியாக பெரிதாகிக் கொண்டு வரும்.
  திரவமொன்றினால் கொடுக்கப்படும் அமுக்கமானது அதனது ஆழத்தில் தங்கியுள்ளது. தொட்டியின் அடியிலுள்ள நீரமுக்கம் உச்சமானது. வளிக்குமிழ் தொட்டியின் அடியிலிருந்து எழும் பொழுது வளிக்குமிழிலுள்ள அமுக்கம் படிப்படியாக குறைகின்றது. ஆகவே வளிக்குமிழின் கனவளவானது அதிகரிக்கிறது. அதனாலேயே வளிக்குமிழ் பெரிதாகின்றது.

- எரிபொருளைக் கொண்டு செல்லும் பவுசர்கள் தரையைத் தொடும் சங்கிலிகளைக் கொண்டுள்ளன.

  எரிபொருளைக் கொண்டு செல்லும் பவுசர்கள் பயணிக்கும்போது வறண்ட காற்றோடு மோதுகின்றன. இந்த தொடர்பு பவுசரின் மேற்பரப்பில் நிலை மின்சாரத்தை உருவாக்குகிறது. இந்த நிலை மின்சாரம் படிப்படியாக தீவிரமடையும் போது, மின் ஏற்றம் ஏற்படுகிறது. இது உலாவியில் மின்சார தீப்பொறிகள் மற்றும் எரிபொருள் எரியும். பவுசர்களில் சங்கிலிகள் தரையில் பயன்படுத்தப்படும்போது, இதன் விளைவாக ஏற்படும் மின்சாரம் சங்கிலி வழியாக நிலத்தடிக்கு கடத்தப்படும். இதனால் தீப்பொறிகள் தடுக்கப்படுகின்றன.

- எஞ்சின் ஆரம்பிக்கும் போது சில பேருந்துகளின் யன்னல்கள் அதிர்கின்றன.

  எம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளிற்கும் இயற்கையான அதிர்வெண் உண்டு.பேருந்துகளின் யன்னல்களிற்கும் அத்தகைய அதிர்வெண் உண்டு. எஞ்சின் இயங்க ஆரம்பிக்கும் போது அதிர்வெண்ணும் அதிர்கின்றது. எஞ்சினுடைய அதிர்வெண் பேருந்தின் யன்னலினுடைய அதிர்வெண்ணிற்கு சமனாகும் போது யன்னல்கள் அதிர ஆரம்பிக்கின்றன. இத்தகைய நிகழ்வே பரிவு அதிர்வு என அழைக்கப்படுகின்றது.

## C பரிசுகள்

C.1.ஒவ்வொரு தரத்திலும் 1, 2, 3 வது இடங்களுக்கும் இன்னும் சில தகுதி வாய்ந்த பாராட்டத்தக்க இடங்களுக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

C.2.அதிக எண்ணிக்கையிலான சமர்ப்பிப்புகளைக் கொடுக்கும் பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயத்திற்கு ஒரு சிறப்பு தகுதி வழங்கப்படுகிறது.

C.3.அதிக எண்ணிக்கையிலான சிறந்த சமர்ப்பிப்புகள் வழங்கும் பாடசாலைக்கு ஒரு வெற்றிக்கோப்பையும் வழங்கப்படும்.

## D போட்டிக்கான நிபந்தனைகள்

உங்கள் சமர்ப்பிப்பு கையேட்டைப் போன்றதாக இருப்பதோடு மற்றும் காகிதத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது உயர் மட்ட தூய்மை மற்றும் ஒழுங்காக இருப்பதோடு தெளிவான கையெழுத்தில் எழுதப்பட வேண்டும்.

உங்கள் கையேட்டை எங்களிடம் சமர்ப்பிக்கும்போது, கடித உறைக்கு மேல் இடது பக்க மூலையில் நீங்கள் சேர்ந்த குழுவைக் குறிக்க வேண்டும்.( உ. ம் .பிரிவ I, தரம் (6

**D.1**A 4 அளவு சுய முத்திரையொட்டப்பட்ட தபால் உறை (ரூபா.30 முத்திரையுடன்) கையேட்டில் சேர்க்கப்படவேண்டும். (பங்கேற்பு சான்றிதழ் அனுப்பி வைக்க) நீங்கள் சமர்ப்பித்த கையேடு மீண்டும் தேவைப்பட்டால் தபால் உறையுடன் ரூபா. 100/= முத்திரையொட்டி அனுப்பி வைக்கவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் படி சரியாக நிரப்பப்பட்ட படிவத்தை நீங்கள் அனுப்ப வேண்டும். **(படிவத்தின் மாதிரி)**

1. முழுப்பெயர்:
   (குடும்பப்பெயர் மற்றும் முதலெழுத்துக்களுடன் பெரிய எழுத்துக்களில்)
2. பாடசாலை:
3. பாடசாலை அடங்கும் கல்வி வலயம்:
4. பாடசாலை அடங்கும் மாவட்டம்:
5. கல்வி கற்கும் தரம்
6. பாடசாலை முகவரி:
7. சொந்த முகவரி:
8. தனிப்பட்ட தொலைபேசி எண்:

. இந்த கையேட்டை எழுதியவர் ...................... என்று நான் சான்றளிக்கிறேன்.

....................................

அலுவலக முத்திரை — கையொப்பம்
(அதிபர்/ உப அதிபர்/ பிரிவுத் தலைவர்)

**மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்யாத சமர்ப்பிப்புகள் நிராகரிக்கப்படும்.**

**D.2.** குறிக்கும் திட்டம்

| | |
|---|---|
| வடிவமைப்பு மற்றும் உள்ளடக்கம் | 60புள்ளிகள் |
| படைப்பாற்றல், வாசிப்புத்திறன், நிறைவு மற்றும் விளக்கக்காட்சி | 40 புள்ளிகள் |

**D. .3**நடுவரினது தீர்ப்பே இறுதியானது. வெற்றியாளர்கள் பின்னர் அறிவிக்கப்படுவர்.

**D.4.** உங்கள் கையேட்டை 2021 ஜூன் 30 அல்லது அதற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**E. சமர்ப்பிப்புகள் மற்றும் மேலதிக விவரங்க**ளிற்**கு**

கலாநிதி குமாரி திலகரத்ன
விஞ்ஞானக் கல்வி மற்றும் விரிவாக்கல் பிரிவு
தேசிய அடிப்படைக்கற்கைகளுக்கான கல்வி நிறுவனம்
ஹந்தான வீதி, கண்டி

மின் அஞ்சல்: sedu@nifs.ac.lk
தொலைபேசி எண். 081- 2232002/077 760 0845 [*கிழமை நாட்கள்: காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை]*

போட்டியின் விவரங்கள் எங்கள் வலைத்தளமான www.nifs.ac.lk இல் பெற்றுக்கொள்ளலாம்